www.Padasalai.Net

**01.04.2024 முதல்** 30.09.2024
**ஆறு மாதங்களுக்கு**
**சம்பளம் வழங்கும் அதிகாரம்**
**(Pay Authorization for the month of**
**April – 2024 to September –2024)**

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.

**கடித (efile) எண்./3128/பக5(1)/2024 –1, நாள்.25.04. 2024**

26/04/2024

அனுப்புநர்
திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வி தற்காலிக பணியிடங்கள் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத 6156 பணியிடங்களுக்கு 31.12.2023 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டு முடிவடைந்து விட்டது– 01.01.2024 முதல் 31.03.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express Pay Order) வெளியிடப்பட்டுள்ள நிலையில், 01.04.2024 முதல் மேலும் ஆறு மாதங்கள் தொடர் நீட்டிப்பு ஊதியக்கொடுப்பாணை (Pay Authorization) வழங்கக் கோரியுள்ளது – தொடர்பாக.

பார்வை
1). அரசாணை (1டி) எண்.389 பள்ளிக் கல்வித் 5(1) துறை நாள். 24.05.2018.
2) அரசாணை (1டி) எண். 145, பள்ளிக் கல்வித் 5(1) துறை, நாள். 01.09.2021.
3) பள்ளிக் கல்வி இயக்கக எண் நாள்.13.01.2024

--------

பார்வை 1–ல் காணும் அரசணையில், தமிழகத்தில் உள்ள அரசு /நகராட்சி /மாநகராட்சி / உயர் /மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு அரசாணைகளின் கீழ் தோற்றுவிக்கப்பட்ட 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளதுபல்வேறு அரசாணையின் கீழ் தோற்றுவிக்கப்பட்டு அப்பணியிடங்கள் அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு பார்வை 2–இல் காணும்

www.Padasalai.Net

அரசாணையில் வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு காலம் 31.12.2023 அன்றுடன் முடிவடைந்துவிட்டது எனவும் தற்பொழுது, இப்பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பு பெற காலதாமதம் ஆகும் நிலையில், இப்பணியிடங்களுக்கு 01.02.2024 முதல் மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள 6156 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு . 01.04.2024 முதல் 30.06.2024 முடிய ஆறு மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான ஏப்ரல் 2024 முதல் செப்டம்பர் – 2024 முடிய ஆறு மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், இத்துறையின் மின்கோப்பு எண். 3128/ப.க5(1)/2024 –ல் நிதித்துறையிடம், 18.04.2024 நாளில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது

தங்கள் நம்பிக்கையுள்ள,

25/4/24

(அரசு சார்பு செயலாளர்)

அரசு செயலாளருக்காக

25.4.2024

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6

மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நிதி(கல்வி–II)துறை , சென்னை–9.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

13281.-

இவ்வியக்கக ந.க.எண்: 001506/அ2/இ3/2021 நாள்: 26/4/24

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இணை இயக்குநர்.

பெறுநர்:

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

26/4/24